# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

**கொள்கை விளக்கக் குறிப்பு 2010-2011**

**மானியக் கோரிக்கை எண்.15**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## 3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

### 1.0 முன்னுரை

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1974), நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம் (1977) காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1981), மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் (1986) ஆகிய முக்கிய சட்டங்களையும், அவற்றின் கீழ் அடங்கியுள்ள விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாக கொண்டுள்ள இந்த வாரியத்திற்கு மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்ட அலுவலகங்கள் உள்ளன.

### 2.0 வாரிய அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், கொள்கை ரீதியான முடிவுகளை எடுத்து வாரியத்தின் நடவடிக்கைகளில் வழிகாட்டவும் ஒரு வாரிய அமைப்பு உள்ளது. வாரியத்தின் முழுநேர தலைவர் மாநில அரசால்

நியமிக்கப்படுகிறார். அவரோடு, அரசின் உயர் அதிகாரிகள் ஐவரும், உள்ளாட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளாக ஐவரும், விவசாயம், தொழில் மற்றும் மீன்வளம் ஆகிய முக்கிய பிரிவுகளை சார்ந்த மூன்று நிபுணர்களும், பொதுத் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இருவரும் மற்றும் ஒரு உறுப்பினர் செயலாளரும் வாரியத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

இவ்வாரியத்திற்கு மாவட்ட அலுவலகங்கள் 28 இடங்களில் அமைந்துள்ளன. மாவட்ட அலுவலகங்கள் அமைந்துள்ள இடம் மற்றும் அதன் ஆளுமைக்குட்பட்ட எல்லைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :-

| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி (மாவட்டம்) |
|---|---|---|
| 1 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சென்னை | சென்னை |
| 2 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், அம்பத்தூர் | திருவள்ளூர் மாவட்டம் (பகுதி) (அம்பத்தூர் மற்றும் பொன்னேரி வட்டம்) |



| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி (மாவட்டம்) |
|---|---|---|
| 3 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம் (பகுதி) (திருவள்ளூர், கும்மிடிபூண்டி, பூவிருந்தவல்லி, திருத்தணி, ஊத்துக்கோட்டை, மற்றும் பள்ளிப்பட்டு வட்டம்) |
| 4 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மறைமலை நகர் | காஞ்சிபுரம் மாவட்டம் (பகுதி) (தாம்பரம், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் மற்றும் செய்யூர் வட்டம்) |
| 5 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், படப்பை | காஞ்சிபுரம் மாவட்டம் (பகுதி)(ஸ்ரீபெரும்புதுர், காஞ்சிபுரம், மதுராந்தகம் மற்றும் உத்திரமேரூர் வட்டம்) |
| 6 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மதுரை | சிவகங்கை மற்றும் மதுரை |
| 7 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் | விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் |

| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி (மாவட்டம்) |
|---|---|---|
| 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 9 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 10 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| 11 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம் | சேலம் |
| 12 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஈரோடு | ஈரோடு மாவட்டம் (பகுதி) (ஈரோடு வட்டம்) |
| 13 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பெருந்துறை | ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் (பகுதி) (பெருந்துறை, காங்கேயம், பவானி, கோபிச்செட்டிபாளையம் சத்தியமங்கலம் மற்றும் தாராபுரம் வட்டம்) |
| 14 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், நாமக்கல் | நாமக்கல் |



| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி (மாவட்டம்) |
|---|---|---|
| 15 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருப்பூர் | திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் (பகுதி) (அவினாசி, பல்லடம் மற்றும் திருப்பூர் வட்டம்) |
| 16 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டம் (பகுதி) (மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் வால்பாறை வட்டம்) |
| 17 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வேலூர் | வேலூர் மாவட்டம் (பகுதி) (ஆற்காடு, வாலாஜா, காட்பாடி மற்றும் அரக்கோணம் வட்டம்), திருவண்ணாமலை மாவட்டம் |
| 18 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வாணியம்பாடி | வேலூர் மாவட்டம் (பகுதி) (வாணியம்பாடி, திருப்பத்தூர் மற்றும் குடியாத்தம் வட்டம்) |
| 19 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் | கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி |

| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி (மாவட்டம்) |
|---|---|---|
| 20 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் |
| 21 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கரூர் | கரூர் |
| 22 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கடலூர் | கடலூர் |
| 23 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 24 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், உதகமண்டலம் | நீலகிரி |
| 25 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 26 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் | விழுப்புரம் |
| 27 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 28 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், நாகர்கோவில் | கன்னியாகுமரி |

இந்த வாரியத்தில் மொத்தம் **741** பேர் பணிபுரிகின்றனர்.



## 3.0 தொழிற்சாலை கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்குதல்

தமிழ்நாட்டில் வேகமாக பெருகிவரும் தொழில்மயமாக்கல் காரணமாக தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. வாரியத்தின் கள அலுவலர்கள் தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். **31.12.2009** வரை வாரியம் **1974–**ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் **12135** அமைப்பு இசைவாணைகளையும், **30944** செயல்பாட்டு இசைவாணைகளையும் மற்றும் **1981–**ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் **12060** அமைப்பு இசைவாணைகளையும், **28094** செயல்பாட்டு இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளால் வெளியிடப்படும் மாசு அளவினைப் பொறுத்து அவைகள் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மிக அதிகளவு மாசுப்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் சிவப்பு வகையிலும், நடுத்தர அளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் ஆரஞ்சு வகையிலும், குறைந்த அளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் பச்சை வகையிலும் அடங்கும். சிவப்பு வகை அதிகளவு மாசுபடுத்தக் கூடிய தொழிற்சாலைகளைக் குறிப்பதால் அவற்றை கவனமாக கண்காணிக்க 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இவ்வகை தொழிற்சாலைகள் அடர் சிவப்பு மற்றும் சாதாரணச் சிவப்பு என்று இருவகைப்படுத்தப்பட்டுள்ளன.

**3.1 உதவி மையம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது, **1974** ஆம் ஆண்டின□ நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், **1981** ஆம் ஆண்டின□ காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் **1986** ஆம் ஆண்டின□ சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை அமல் படுத்தி வருகிறது.



தொழிற□சாலைகள□ வாரியத்தின் இசைவாணை / அங்கீகாரம் பெறுவதில□ தாமதம் ஏற□பட்டுவந்தது. பெரும்பாலான விண்ணப்பங்கள□ சரிவர பூர்த்தி செய□யப்படாமலும், தேவையான விவரங்கள□ இன□றி அல□லது ஆவணங்கள□ இணைக்கப்படாமலும் இருந்ததால□ அவ□விண்ணப்பங்கள□ மீது நடவடிக்கை எடுக்க முடியாமல□ தொழிற□சாலைக்கு திரும்ப அனுப்பப்பட்டு வந்தது. தமிழ□நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின□ மாவட்ட பொறியாளர்கள□ தொழிற□சாலைகளுக்கும், உள□ளாட்சி நிறுவனங்களுக்கும் விண்ணப்பங்களை பூர்த்தி செய□வதற□கு தேவையான உதவிகளை செய□து வந்துள□ளனர். இருப்பினும், விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப் படிவங்களை சரிவர பூர்த்தி செய□வதற□கு போதுமான கால அவகாசம் இல□லாத நிலை இருந்து வந்தது. இதனை கருத்தில□ கொண்டு வாரியம், விண்ணப்பதாரர்களின□ வசதிக்காக விண்ணப்பப் படிவங்களை எளிமையானதாக்கியும், விண்ணப்பப் படிவங்களை எளிதில□ பூர்த்தி செய□யவும், விண்ணப்பப்படிவங்□களை சிரமம் இன□றி வாரியத்தில□

சமர்ப்பிக்கவும், இசைவாணைகளை உரிய நேரத்தில அளிக்கவும் தனியாக ஒரு குழு ஏறபடுத்தப்பட வேண்டும் எனபதை உணர்ந்தது. மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் **2009 – 2010** ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்கும் முன் வாரியம் அமல்படுத்தும் விதிகளின் கீழ் பெற வேண்டிய ஒப்புதல் / அனுமதிகள் ஆகியவற்றை எளிதாகவும் விரைவாகவும் பெற வாரிய தலைமை அலுவலகத்தில் உதவி மையம் ஒன்றை ஏற்படுத்தும் என அறிவித்திருந்தார்.

எனவே தமிழநாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிறசாலைகளுக்கு உதவும் வகையிலும், விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள சிரமமினறி பூர்த்தி செயது அதனை வாரியத்தில எளிய முறையில சமர்ப்பிக்கவும், இசைவாணைகளை உரிய காலத்திறகுள வழங்கும் வகையில இதறகென தனியாக ஒரு உதவி மையத்தை ஏறபடுத்தியுளளது. முதல கட்டமாக, இந்த உதவி மையமானது செனனை, திருவளளூர் மறறும் காஞசிபுரம் மாவட்டங்களில



அமைந்துளள வாரிய அலுவலகங்களான செனனை, அம்பத்தூர், திருவளளூர், ஸ்ரீபெரும்புதூர், மறறும் மறைமலைநகர் ஆகியவறறின கட்டுப்பாட்டுக்குள அமைந்துளள தொழிறசாலைகள மறறும் உளளாட்சி அமைப்புகளின தேவைகளை பூர்த்தி செயயும் உதவி மையமானது விண்ணப்பப்படிவத்தினை எளிமையாக்கியதோடு பூர்த்தி செயயப்பட்ட விண்ணப்பப்படிவங்கள பெறுவதறகான நடைமுறைகளை ஏறபடுத்தியுளளது. உதவிமையமானது விண்ணப்பப் படிவங்கள பெறப்பட்டதிலிருந்து இசைவாணை வழங்கும் வரை விண்ணப்பங்களை அவவப்பொழுது உனனிப்பாக கண்காணித்து வருகினறது. இந்த மையமானது சுறறுச்சூழல சட்டங்கள குறித்து தொழிறசாலைகளுக்கு விளக்கங்களை அளிப்பது, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செயது வாரியத்திறகு சமர்ப்பிப்பதறகு உதவுவது, விண்ணப்பப்படிவங்களின நிலை குறித்து தெரிவிப்பது, இசைவாணைகளை உரிய கால அளவிறகுள வழங்குவது போனற பணிகளை

ஒற□றை சாளர முறையில□ செய□யும். இதற□கென மூன□று அலுவலர்கள□ பணி அமர்த்தப்பட்டுள□ளனர்.

பூர்த்தி செய□யப்பட்ட விண்ணப்பங்கள□ உதவி மையத்தில□ பெறப்பட்டு ஒப்புதல□ / இசைவாணை கீழ□ குறிப்பிட்டுள□ள கால அளவுக்குள□ உதவி மையத்தின□ மூலமாகவே வழங்கப்படும்.

| **வ எண்.** | **தொழிற□சாலைகளின□ வகை** | **குறித்த கால அளவு** |
|---|---|---|
| 1. | சிவப்பு | 30 நாட்கள□. |
| 2. | ஆரஞ□சு | 15 நாட்கள□. |
| 3. | பச்சை | 10 நாட்கள□. |

உதவி மையத்தில□ விண்ணப்பம் கொடுத்த அனைத்து விண்ணப்பதாரர்களும், தமிழ□நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின□ வலை தளத்தில□□ தங்களது விண்ணப்பப்படிவத்தின□ தற□போதைய நிலை குறித்து அறிந்து கொள□ள இயலும். இது தவிர, விண்ணப்பங்கள□ பூர்த்தி செய□வதில□ ஏற□படும் சந்தேகங்கள□, தங்களது விண்ணப்பங்களின□ நிலை, இசைவாணை, அங்கீகாரம் வழங்கும் நிலை, போன□ற விவரங்களை தொலைபேசி



மூலமும் உதவி மையத்தினை தொடர்புகொண்டு அறிந்து கொள□ளலாம். உதவி மையத்தின□ நடவடிக்கைகளை வாரியத்தின□ உயர் அதிகாரிகள□ முறைப்படி கண்காணிப்பர்.

## 3.2 ஆய்வு மற்றும் மாதிரிகளை எடுப்பதற்கான காலவரையறை

மாவட்ட அலுவலகத்தில் உள்ள களப்பொறியாளர்கள் பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் சிவப்பு வகை தொழிற்சாலைகளை மாதம் ஒருமுறையும், சாதாரண சிவப்பு வகை தொழிற்சாலைகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை நான்கு மாதத்திற்கு ஒரு முறையும், சிறிய முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். இதைப் போன்றே பெரிய மற்றும் நடுத்தர முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் பச்சை வகை

தொழிற்சாலைகள் அனைத்தும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை சோதனை செய்வதன் மூலம் அத்தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா என்பது புலனாகிறது. பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் மற்றும் சாதாரண சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மாதம் ஒரு முறை கழிவுநீர் மாதிரிகள் சோதனைக்காக சேகரிக்கப்படுகின்றது. நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறையும், சிறு முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒருமுறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. பெரிய முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளிலிருந்து நான்கு மாதத்திற்கு ஒருமுறையும், நடுத்தர மற்றும் சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளிலிருந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. வாரியம் நிர்ணயித்த தர



அளவிற்கு உட்பட்டு கழிவுநீரின் தன்மை இல்லாத தொழிற்சாலைகளுக்கு, திருத்த நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைப்பதோடு தொடர்ந்து கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்யாத தொழிற்சாலைகள் மீது நீர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தொழிற்சாலைகள் மாசு தடுப்பு நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாசு தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகளை சீரிய முறையில் கண்காணித்து மாசு தடுப்பு முறைகளை முழுமையாக நிறைவேற்றும் தொழிற்சாலைகளுக்கு குறித்த நேரத்தில் இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. உரிய நேரத்தில் இசைவாணை புதுப்பித்து வழங்குவதன் மூலம் தொழிற்சாலைகள் இசைவாணையில் குறிப்பிட்டுள்ள மாசு தடுப்பு நிபந்தனைகளை கடைபிடிப்பதை வாரியம் ஊக்குவிக்கிறது.

## 3.3 மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அதிகம் அமைந்துள்ள பகுதிகளை கண்காணித்தல்

அதிகளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் வெளிவரும் கழிவுகளின் நச்சுத் தன்மை மற்றும் மாசுபடுத்தும் அளவு முதலியவற்றை கருத்தில்கொண்டு வாரியம், தமிழ்நாட்டில் 10 முக்கிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும், அந்த பகுதியில் உள்ள பொதுமக்களை நேரடியாகத் தொடர்புகொள்ளவும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை நியமித்துள்ளது.

இந்தப் பத்து இடங்கள் பின்வருவன ஆகும்.

1. மணலி
2. கடலூர்
3. தூத்துக்குடி
4. மேட்டூர்
5. இராணிப்பேட்டை
6. ஸ்ரீபெரும்புதூர்
7. பெருங்குடி தகவல் தொழில்நுட்ப பூங்கா பகுதி
8. பெருந்துறை
9. கும்மிடிப்பூண்டி



10. திருப்பூர்

இப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளினால் சுற்றுச்சூழல் மாசு சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படின், அதனை உடனுக்குடன் பொதுமக்கள் அப்பகுதியில் நியமிக்கப்பட்டுள்ள வாரியப் பொறியாளர்களிடம் எளிதில் நேரடியாக, தெரிவித்து தீர்வு காண இந்த ஏற்பாடு வழிவகை செய்கின்றது.

## 4.0 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றிவருகிறது. சிறு தொழிற்சாலைகளுக்குப் போதிய இடவசதி மற்றும் நிதி வசதி இல்லாத மற்றும் பிற காரணங்களால் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறு தொழிற்சாலைகளுக்குப் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதிலும், திட்டக் கருத்துருவின்மீது

தொழில்நுட்ப நுண்ணாய்வு செய்வதிலும் உதவி செய்கிறது.

**<u>பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை:</u>**

பல்வகை தொழிற்சாலைகளுக்கென திட்டமிடப்பட்ட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விபரங்கள் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 15 திட்டங்கள் |
| 2. | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 31 திட்டங்கள் |
| 3. | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் |

இந்த 47 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்களில், 15 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக் காகவும், 31 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், சாயப்பட்டறைகளுக்காகவும், 1 பொது கழிவுநீர்



சுத்திகரிப்பு நிலையம், உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளுக்காகவும் செயல்பட்டு வருகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான 15 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் எதிர்மறை சவ்வூடு அமைப்பு மற்றும் அடர்கசடு மேலாண்மை, 5 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் முடியும் தருவாயில் உள்ளன. 8 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

மேலும் சாயப் பட்டறைகளுக்கான 31 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் எதிர்மறை சவ்வூடு அமைப்பு மற்றும் அடர்கசடு மேலாண்மை அமைப்பு 15 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. நான்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இவ்வமைப்பினை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மீதமுள்ள 12 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைப்பாட்டினை அடையும் அமைப்பினை ஏற்படுத்துவதற்கு கருத்துரு ஆய்வில் உள்ளது.

## 5.0 கழிவுப் பொருட்கள் மேலாண்மை

### 5.1 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. 2008–ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்டு தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகளின்படி 31.03.2009 வரை 2655 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள் கண்டறிந்து பட்டியலிடப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளன. கும்மிடிபூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப்பொருட்களை, பாதுகாப்பாக சுத்திகரித்து அகற்றுவதற்கான பொதுவசதி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது தவிர, திருப்பூரில்



அமைந்துள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, கரூரில் அமைந்துள்ள பொதுக்கழிவு மற்றும் தனியார் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, அபாயகரமான கழிவுப்பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், நல்லூர் கிராமம் கருப்பக்கவுண்டர்பாளையத்திலும், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மத்தகிரி கிராமத்திலும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. வாரியத்தால் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெற்றவுடன் மேற்கூறிய இரண்டு இடங்களிலும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகக் கொள்கையை மேற்கொள்வதற்காக பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை மூலப்பொருளாக பயன்படுத்துவதற்கு சிமெண்ட் தொழிற்சாலைகள் ஊக்குவிக்கப்பட்டு, புலியூர் செட்டிநாடு சிமெண்ட் ஆலையில் சோதனை ஓட்டம் நடைபெற்றுள்ளது. மேலும், ஏ.சி.சி., மதுக்கரை மற்றும்

கிராசிம் சிமெண்ட் தொழிற்சாலைகளில் பெயிண்ட், தார், கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை எரிபொருளாக பயன்படுத்த சோதனை ஓட்டம் நடைபெற்றுவருகிறது. இதன் தொடர்பாக வாரியம் ஒப்புதல் ஆணையை வழங்கியுள்ளது. பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப் பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக அகற்றுவதற்கான வசதியை ஏற்படுத்த, மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.2 மருத்துவக் கழிவுகள் மேலாண்மை

இந்திய அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் **1986**ன் கீழ் மருத்துவக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் **1998** **(2000** ஆண்டில் திருத்தப்பட்டது) அறிவிக்கை செய்துள்ளது. இவ்வறிவிக்கையின்படி, மருத்துவக் கழிவுகளை அங்கீகரிக்கப்பட்ட முறையில் வகைப்படுத்தி, சுத்திகரித்து முடிவு செய்யவேண்டும். இதற்கென வாரியம் இதுவரை **2479** தனியார் மருத்துவமனைகளையும், **317** அரசு மருத்துவமனைகளையும் பட்டியலிட்டுள்ளது. மாநிலத்தில்



உள்ள தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்காக மருத்துவ கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் பொது அமைப்புகளை ஏற்படுத்த **11** இடங்கள் கண்டறியப்பட்டு, **11** பொது அமைப்புகளும் இயக்கத்தில் உள்ளன. பொது மருத்துவக்கழிவு சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதியினைக் பகுப்பாய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, அரசாணை (4டி) எண்.10, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல(ஈஏபி1/1)த் துறை, நாள் 28.09.2007ன்படி, மருத்துவக் கழிவு மேலாண்மையை நடைமுறைப்படுத்த 29 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 241 துணை மாவட்ட மருத்துவமனைகள், 41 மருத்துவக்கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள், 130 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளை உள்ளடக்கி ஆணை வழங்கியுள்ளது. அரசு மருத்துவமனைகளில்

உற்பத்தியாகும் மருத்துவக் கழிவுகளை, பொது மருத்துவ கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகள் மூலம் சுத்திகரிப்பு செய்து பாதுகாப்பாக வெளியேற்றுகிறது.

## 5.3 நகர திடக்கழிவுகள் மேலாண்மை

நகர மயமாதல் அதிகமாவதாலும், நகர திடக்கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும், அறிவியல் ரீதியாக திடக்கழிவுகளை மேலாண்மை செய்வது அவசரத் தேவையாகிறது. திடக்கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் மறுஉபயோகம் செய்தல் போன்றவற்றை வாரியம் பரிந்துரைக்கிறது. வாரியம், உயிரகக் கழிவுகளை உரமாக்குவதற்காக 109 நகராட்சிகளுக்கும் மற்றும் ஒரு மாநகராட்சிக்கும் தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளது. 63 நகராட்சிகளின் தடையில்லா சான்றிதழ்கள் உரிமங்களாக மாற்றப்பட்டுள்ளன. 2000ம் ஆண்டின் நகர திடக்கழிவு விதிகளை செயல்படுத்துவதன் தற்போதைய நிலைமை



குறித்து ஆய்வு செய்ய சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் கண்காணிப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தற்போதைய நிலவரம் குறித்த அறிக்கையினை தனது பரிந்துரையுடன் சமர்ப்பிக்கும்.

## 5.4 பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் பெருகுவதால் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. பொதுமக்களிடையே ஒருமுறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் பெருகிவிட்டன. இதனால் நகரத்திடக் கழிவுகளின் அளவு பெருகியதோடு மக்காத தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேட்டினை விளைவித்து வருகின்றது. இதனை கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் (உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு) விதிகளை செயல்படுத்தி வருகின்றது. இவ்விதிகளின்படி 20 மைக்ரான் தடிமனுக்கு கூடுதலான

தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வரும் நிதி ஆண்டில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்பவர்களை கண்டறிதல் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு விதிகளை செம்மையாக நடைமுறைபடுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிய ஒரு அறிக்கையினை தயாரித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

### 5.5 பிளாஸ்டிக் கழிவினை சிமெண்ட் உலைகளில் இணை எரிபொருளாக பயன்படுத்துவது.

அபாயகரமான கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளினால் சுற்றுச்சூழல் சீரழிவதிலிருந்து பாதுகாக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சியின் ஒரு பகுதியாக, சிமெண்ட் உலையில் மாற்று எரிபொருளாக, பிளாஸ்டிக் கழிவினை இணை எரிபொருளாக சிமெண்ட் தொழிற்சாலைகளில் பயன்படுத்த வாரியம் முயற்சிகள் மேற்காண்டு வருகிறது.



சிமெண்ட் உலைகளில் அபாயகரமான கழிவுகளை இணை எரிபொருளாக பயன்படுத்துவது குறித்த கருத்தரங்கம் ஒன்றினை 26.8.2009 அன்று சென்னையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்தியது. மேலும் இது குறித்து 10.10.2009 அன்று திருநெல்வேலி மாநகராட்சியில், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் இளைஞர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில், திருநெல்வேலி மாநகராட்சி, தூத்துக்குடி மாநகராட்சி, நாகர்கோயில் நகராட்சி மற்றும் அருகாமையில் அமைந்த நகராட்சிகளின் அனைத்து பயனாளர்களுக்குமான கூட்டம் நடைபெற்றது. இதில், மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவினை மாற்று எரிபொருளாக திருநெல்வேலி மாவட்டம், சங்கர் நகரில் உள்ள தி/ள். இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தொழிற்சாலையின் சிமெண்ட் உலைகளில் இணை எரிபொருளாக பயன்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டது. பிளாஸ்டிக் கழிவுகளை முறையற்று வெளியேற்றுவதனால் உண்டாகும் தீய விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வினை அதிகப்படுத்தவும் மற்றும் பிரித்தெடுத்தல் முறையினை பின்பற்றுவதனை

ஊக்குவிக்கவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆகியோருக்கு தலா ரூபாய். 2 இலட்சம் மற்றும் நாகர்கோயில் நகராட்சிக்கு ரூபாய்.1 இலட்சம் வழங்கியது. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை பிளாஸ்டிக் அற்ற மண்டலங்களாக உருவாக்கும் வகையில், இம்மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை தி/ள். இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் இணை எரிபொருளாக பயன்படுத்தும் முறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டை பிளாஸ்டிக் அற்ற மாநிலமாக உருவாக்க, இத்தகைய இணை செய்முறை உத்திகளை தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பயன்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

### 5.6 மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை

மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்துவருகிறது. இதன் தொடர்பாக



அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தேசிய உலோகப் பொறியியல் ஆய்வு நிறுவனத்தின் வல்லுநர் (NML) மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மின்னணுக்கழிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. மின்னணுக் கழிவுகளைப் பிரித்து மறுசுழற்சி செய்யும் 12 தொழிற்சாலைகளுக்கு மின்னணுக் கழிவுகளை முறையாகப் பிரித்து அவற்றில் உள்ள அச்சு சுற்றுத்தகடு, ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று, இரும்பு, செம்பு, ரப்பர், கண்ணாடி முதலியவற்றை பிரித்தெடுப்பதற்கு இசைவாணை வழங்கியுள்ளது. இவற்றில் அச்சுச் சுற்றுத்தகடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று முதலியவை அமெரிக்க ஐக்கிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் உள்ள கன உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. மற்ற கழிவுகள் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன.

## 6.0 காற்று மற்றும் நீரின் தன்மையை கண்காணிக்க

**வாரியத்தின் நடவடிக்கைகள்**

**6.1 காற்றின் தன்மை கண்காணிப்பு**

நகர்புறங்களில் பெருகிவரும் தொழிற் சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும், புகையினாலும் சுற்றுப்புறக்காற்றின் தன்மை மாசடைகிறது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981—ன்படி தமிழ்நாடு முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றுப்புற காற்று மண்டல கண்காணிப்புத் திட்டங்களின் கீழ் சென்னை (3 இடங்கள்), கோவை (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள் ), மதுரை ( 3 இடங்கள் ), சேலம் (1 இடம்) ஆகிய இடங்களில் காற்று மண்டல கண்காணிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இத்திட்டமானது மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் செயல்பட்டுவருகின்றது. வாரியம் சென்னை மாநகரில் 5 சுற்றுப்புறக் காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்து உள்ளது. இந்நிலையங்களின் மூலம் சுற்றுப்புறக் காற்றின்



தன்மையினை அந்த நகரங்களின் மக்கள் தொகை மிகுந்த குடியிருப்பு, வர்த்தகப் பகுதியில் கண்காணிக்கப்படுகின்றது. இது தவிர வாரியம், காற்று மாசு கண்காணிப்பினை தீபாவளி மற்றும் போகி பண்டிகை காலங்களில் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் மேற்கொண்டு வருகிறது. சென்னை நகரில் சுற்றுச்சூழல் காற்று கண்காணிப்புத் திட்டத்தை மேம்படுத்த கார்பன் மோனாக்ஸைடு மாசினைக் கண்டறிய, 5 கார்பன் மோனாக்ஸைடு அளவிடும் கருவிகள் ரூ.25 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. மேலும் வாரியம் சுற்றுப்புற காற்றில் உள்ள ஓசோன் மாசினை அளவிடும் கருவிகளை வாங்கவும் அதன் மூலம் சென்னை, கோவை, கடலூர் ஆகிய இடங்களில் தொழிற்சாலை, வணிக பகுதிகளில் ஓசோன் மாசு குறித்து அளவிட உத்தேசித்துள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கழிவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மாசின் அளவினைக் கண்டறிய பகுப்பாய்வு செய்யப் படுகிறது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் சுற்றுப்புற காற்று மாசுக்கான புதிய தர அளவுகளை நிர்ணயித்து 18.9.2009 முதல் அமல்படுத்தியுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு 10 மைக்ரான் கீழ் நுண் துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் கீழான நுண்துகள்களை அளவிட தேவையான கருவிகளை வாங்கி வாரியத்தின் அனைத்து காற்று ஆய்வு செய்யும் (13) ஆய்வகங்களையும் மேம்படுத்த வாரியம் உத்தேசித்துள்ளது.

**6.2 வாகனப்புகை கண்காணிப்பு**

தமிழக அரசு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 –ல் தேவையான திருத்தங்களை செய்து சென்னை நகரில் உள்ள பிற வாகனங்களைப் போல சரக்கு வாகனங்களும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் புகை சோதனை நிலையங்களில் வாகனப்புகை தர சான்றிதழ் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு முன் தமிழ் நாடு மாசு கட்டுபாடு வாரியம் மட்டுமே சென்னை நகர சரக்கு வாகனங்களுக்கு புகை சான்றிதழ் வழங்க முடியும். இதன்படி சென்னையில் உள்ள 75 தனியார் புகை சோதனை நிலையங்களில் அனைத்து ரக வாகனங்களுக்கும் புகை சோதனை செய்து சான்றிதழ்



வழங்கி வருகின்றன. இவற்றுடன் அம்பத்துாரில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய புகை சோதனை நிலையத்திலும் சென்னை நகரில் உள்ள சரக்கு வாகனங்களை புகை ஆய்வு செய்து புகை தர சான்றிதழ் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6. 3 நீரின் தன்மை கண்காணிப்பு**

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கிய நோக்கமானது நீரின் முழுத்தன்மையை பேணுதல் மற்றும் சீரமைத்தல் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற நீரின் தன்மையை ஒழுங்காகக் கண்காணிப்பது அவசியமாகிறது. எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் காவிரி ஆற்று நீரின் தன்மையை இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு (மினார்ஸ்) திட்டத்தின் கீழ் 16 இடங்களிலும் மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு (ஜெம்ஸ்) திட்டத்தின் கீழ் 4 இடங்களிலும் கண்காணித்து வருகின்றது. இதைத்தவிர தாமிரபரணி,

பாலாறு மற்றும் வைகை ஆறுகளின் தன்மையையும், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஏரிகளின் நீரின் தன்மையையும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்திற்கு டெல்லியிலுள்ள மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் நிதி உதவியளிக்கிறது. கூடுதலாக, காவிரி, தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை நதிநீர் படுகையில் உள்ள மாசினை அளவிட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களின் மூலமாக நீர்நிலைகளின் தரத்தினை ஆய்வு செய்து வருகிறது.

### 6. 3. 1 காவிரி ஆறு

காவிரி ஆற்றில் 20 இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பொதுவாக காவிரி ஆற்றின் நீரின் தரம் குளிப்பதற்கும், வழக்கமான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.



### 6. 3. 2 தாமிரபரணி ஆறு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தாமிரபரணி ஆற்றின் நீரின் தன்மையை ஏழு இடங்களில் கண்காணித்து வருகின்றது. தாமிரபரணி நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், வழக்கமான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரிப்பட்டு குடிப்பதற்கு உகந்ததாக காணப்படுகின்றது.

### 6. 3. 3 பாலாறு

வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள நீர்சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. ஆய்வறிக்கையின் புள்ளியல்படி பாலாறு நீரின் தரம் பொதுவாக குளிப்பதற்கும், வழக்கமான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரிப்பட்டு குடிப்பதற்கு உகந்ததாக காணப்படுகின்றது.

### 6. 3. 4 வைகை ஆறு

வைகை ஆற்று நீரின் தன்மை திருபுவனம் நீரேற்று நிலையத்தின் நீர்சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர்மாதிரி சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. வைகை ஆற்று நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், வழக்கமான சுத்திகரிப்பு, கிருமிநாசினி மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிப்பதற்கு உகந்ததாக காணப்படுகின்றது.

**6. 3. 5 ஏரிகள்**

இந்திய தேசிய நதிநீர் ஆதாரங்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகளில் நீர் மாதிரிகள் சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரியின் நீரின்தன்மை முறையான சுத்திகரிப்பும், அதை தொடர்ந்து கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்பும் செய்து குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன்வளர்ப்பு, வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.

## 6.4 சென்னை மாநகர நீர்வழிக் கண்காணிப்பு திட்டம்



சென்னை மாநகரில் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி நல்லா ஆகிய நான்கு நீர்வழித் தடங்கள் உள்ள 34 நீர் நிலைகளிலும், 24 தொழிற்சாலை கழிவு நீர் வெளியேற்ற நிலைகளிலும் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது.

## 7.0 வாரியத்தின் இதர முக்கிய பணிகள்

### 7.1 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் **1994** ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள் மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்த பயிற்சி நிலையம் **2009–10** ஆம் ஆண்டில் **9** பயிற்சி வகுப்புகள் நடத்தி **1279** நபர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

### 7.2 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்க்க, சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலங்களின்போது பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் ஒலி மற்றும் காற்று மாசு, போகி பண்டிகையின்போது பழைய பொருட்களை எரிப்பதால் ஏற்படும் காற்று மாசு, வாகனப்புகையினால் ஏற்படும் மாசு, ஓசோன் படலம் பாதுகாப்பு, திடக்கழிவு மேலாண்மை, சாலை பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு போன்ற விழிப்புணர்வு இயக்கங்கள், பயிலகங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இந்த மையம் 2009–10ஆம் ஆண்டில் 89 விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த விளம்பரப் பலகைகள், 409அரசு பேருந்துகளின் உட்புறம் வைக்கப்பட்டுள்ளது.

### 7.3 இடம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான இடம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டங்கள் அடிப்படையில், புவியியல் தகவல் முறைகள்



மேம்படுத்துதல் உள்ளிட்ட மாவட்டச் சுற்றுச்சூழல் வரைபடம், மண்டல வரைபடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்கள் ஆகியன தயாரிக்கும் பணிகளை 2000–2001 ஆம் ஆண்டு முதல் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரிய உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

இதன் மூலமாக கோயம்புத்தூர், வேலூர், தூத்துக்குடி, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், ஈரோடு, சேலம், கரூர், மதுரை, நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட சுற்றுச்சூழல் வரைபடமும் மற்றும் சென்னை மாநகருக்கான சுற்றுச் சூழல் மேலாண்மை திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, வாரிய நடப்பாணை எண்.44, நாள்19.11.2008 படி 2010ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான இடம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டங்கள் நடவடிக்கைகளாக, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட

சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### 7.4 பசுமைப் போர்வை திட்டம்

மாசினைத் தடுக்கும் வழிமுறையாக, தொழிற்சாலைகள் தங்களது வளாகத்தில் 25 சதவீதம் நிலப்பரப்பில் அடர்த்தியான மரங்களை வளர்க்க வலியுறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, தொழிற்சாலைகள் போதிய அளவு மரங்களைத் தங்களது வளாகத்திலும் மற்றும் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன.

உலகம் வெப்பமயமாவதைத் தடுக்க உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதனைத் தடுக்க ஒரு வழியானது பசுமை போர்வையினை ஏற்படுத்துதல் ஆகும். தமிழகத்ததில் பசுமை போர்வையினை ஏற்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து) உள்ள நடுநிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரைக் கொண்டு



பசுமைபோர்வையினை ஏற்படுத்த ரூ.31 இலட்சம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது.

### 7.5 தூய்மையான தொழில் நுட்பங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள் கழிவுநீரைச் சுத்திகரிக்க மேற்கொள்ள செய்வது மட்டுமன்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தூய்மையான தொழில் நுட்பத் திறனை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30% வரை எரிசாம்பலை பயன்படுத்துதல், கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல், சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்கு பதிலாக வாயு கார்புரைசிங் முறையை

வெப்பக்கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ – குளோரைட்ஸ் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி வருகின்றன.

### 7.6 நூலகம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நூலகம் 1989–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் 10,337 புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட 75 இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), 9 செய்தி மடல்கள், 13 மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து ஈடுபடும் அனைவரும் இதில் உறுப்பினராகலாம்.

### 7.7 செய்தி மடல்



வாரியத்தின் செயல்பாடுகள், ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய சுற்றுச்சூழல் சம்பந்தமான செய்திகள், சுற்றுச்சூழல் சம்பந்தமான கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய செய்திமடல் ஒன்றை வாரியம் ஒவ்வொரு காலாண்டிற்கும் வெளியிட்டுவருகின்றது. இந்த செய்திமடல் அரசு துறை அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் அனைத்து மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

## 8.0 நிறுவனத்தை வலுப்படுத்துதல் மற்றும் திறனை மேம்படுத்துதல்

ஆகஸ்டு 2008ம் ஆண்டு முதல் ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் மற்றும் பெருந்துறை ஆகிய மூன்று இடங்களில் புதிய மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றது. வாரியத்தின் உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும்பொருட்டு வாரியத்திற்குச் சொந்தமாக தலைமை அலுவலக கட்டிடம் கிண்டியில் கட்டப்பட்டதுடன், மாவட்ட அலுவலகங்களுக்கு அம்பத்தூர், ஓசூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் கட்டிடம்

கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும் மறைமலைநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மாவட்ட அலுவலகங்கள் கட்டப்பட்டு 2009 ஆண்டுமுதல் செயல்பட்டு வருகின்றது.

**என். செல்வராஜ்**
**அமைச்சர் – வனம்**